இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"செல்வர்களே ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் நீங்கள் எல்லாம் அனுபவித்துவிட்டீர்கள். இப்போது உண்டு கொழுத்திருப்போரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் பட்டினி கிடப்பீர்கள். இப்போது சிரித்து இன்புறுவோரே, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் துயருற்று அழுவீர்கள். மக்கள் எல்லாரும் உங்களைப் புகழ்ந்து பேசும்போது, ஐயோ! உங்களுக்குக் கேடு! ஏனெனில் அவர்களின் மூதாதையரும் போலி இறைவாக்கினருக்கு இவ்வாறே செய்தார்கள்." (லூக்கா 6:24-26)

CATHOLIC BISHOPS' CONFERENCE
MALAYSIA · SINGAPORE · BRUNEI

# மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணையின் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை 2025

# ஆய்வுகளும் திட்டங்களும்

பிளந்தோங், ஜொகூர்: மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணையின் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை (CBCMSB) சமீபத்தில் 2025 ஆம் ஆண்டின் முதல் கூட்டத்தை இங்குள்ள மஜோடி மையத்தில் நடத்தியது. ஆயர்களைத் தவிர, குருத்துவக் கல்லூரி மாணவர்கள், கல்லூரி அதிபர்கள், ஆன்மீக இயக்குநர்கள் மற்றும் சமயப் பெரிய மேலாளர்களின் (CRMS) மாநாட்டின் உறுப்பினர்களும் தங்கள் சொந்த கூட்டங்களை நடத்தினர். கத்தோலிக்க திருஅவையில் உள்ள பல்வேறு குழுக்கள் ஒன்றிணைந்து இறைவேண்டலுக்கான சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் திட்டவட்டமான திட்டங்களைப் பற்றி சிந்திக்க இந்த நிகழ்வு ஒத்துழைப்பு, கூட்டுறவு மற்றும் அர்த்தமுள்ள விவாதங்களுக்கு ஒரு மதிப்புமிக்க வாய்ப்பை வழங்கியது.

### திருத்தந்தையின் சிங்கப்பூர் வருகை

செப்டம்பரில் சிங்கப்பூருக்கு திருத்தந்தை மேற்கொண்ட சிறப்பு வருகை, 2024-ம் ஆண்டு நிறைவு விழாவில் விவாதிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க நிகழ்வுகளில் ஒன்றாகும். ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன்னர், 1986 ஆம் ஆண்டு திருத்தந்தை இரண்டாம் ஜோன் பால் வருகை தந்த பின்னர், இப்பகுதிக்கு திருத்தந்தையின் முதல் வருகை இதுவாகும். சிங்கப்பூர் பேராயர் கர்தினால் வில்லியம் கோ, இந்த வருகையானது ஒரு அற்புதமான வெற்றி என்று விவரித்தார், இது உள்ளூர் கத்தோலிக்க சமூகத்திற்கு ஒரு தனித்துவமான மற்றும் ஒன்றிணைக்கும் நிகழ்வு என்று குறிப்பிட்டார். சிங்கப்பூரில் உள்ள பல்வேறு இதர மறைமாவட்டங்கள் மற்றும் பிற பகுதிகளிலிருந்தும் கத்தோலிக்கர்களை ஒன்றிணைப்பதில் இந்த வருகை ஏற்படுத்திய ஆழமான தாக்கத்தை அவர் வலியுறுத்தினார்.

### வத்திக்கானில் ஆயர்களின் ஆயர் பேரவை

வத்திக்கானில் நடைபெற்ற ஆயர் பேரவையின் 16வது பொதுப் பேரவையில் CBCMSB இன் தலைவரும், கோலாலம்பூர் பேராயருமான ஜூலியன் லியோவின் பங்கேற்பு குறித்தும் இந்த பேரவை கவனம் செலுத்தியது. அக்டோபர் 2024 இல் நடந்த சினோட், ஒரு மாத கால அமர்வுக்கு உலகம் முழுவதிலுமிருந்து 450 பங்கேற்பாளர்களை ஒன்றிணைத்தது. இது 2021 இல் தொடங்கிய சினோடலிட்டியின் கருப்பொருளில் மூன்று வருட செவிசாய்த்தல் மற்றும் உரையாடலின் உச்சகட்ட நிகழ்வாக அமைந்தது என்று கருத்துரைக்கப்பட்டது.

பேராயர் ஜூலியன், கூட்டத்தை வரையறுத்த சினோடலிட்டி எனும் கூட்டொருக்கியக்க உணர்வைப் பற்றி விரிவாகப் பேசினார், 'ஆவியில் உரையாடல்', ஒருவருக்கொருவர் செவிசாய்த்தல் மற்றும் ஒற்றுமையின் உணர்வில் உரையாடலை வளர்ப்பது ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மேற்கண்டமர்வு எடுத்துக்காட்டுகிறது என்றார்.


மலேசியா, சிங்கப்பூர், புரூணை ஆகிய நாடுகளின் ஆயர்கள்

### ஜூபிலி ஆண்டு திருப்பயணங்கள்

இறைமக்கள், "நம்பிக்கையின் திருப்பயணிகள்" என்று அறிவிக்கப்பட்ட யூபிலி ஆண்டிற்கான திட்டங்களையும் ஆயர்கள் விவாதித்தனர்.

மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை ஆகிய நாடுகளில் உள்ள ஒவ்வொரு மறைமாவட்டமும் யூபிலி ஆண்டில் நம்பிக்கையாளர்கள் வருகை புரிய சிறப்பு திருப்பயண தளங்களை அடையாளம் கண்டுள்ளது. இந்த புனித யாத்திரை மையங்கள் கத்தோலிக்கர்கள் தங்கள் நம்பிக்கையைப் பிரதிபலிக்கவும், திருஅவையின் பணிக்கான தங்கள் அர்ப்பணிப்பைப் புதுப்பிக்கவும் ஆன்மீக அடையாளங்களாக செயல்படுகின்றன என்று கருத்துரைக்கப்பட்டது.

### ஒருங்கிணைந்த மனித வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கான அலுவலகம்

வத்திக்கானில் உள்ள ஒருங்கிணைந்த மனித வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான (DPIHD) அலுவலகத்தில் உள்ள பசிபிக் ஆசியா மற்றும் ஓசியானியாவின் வட்டார ஒருங்கிணைப்பாளரான Alwin D Macalalad நிறைவுரையில் பேசினார். DPIHD இன் பணி மற்றும் செயல்பாடுகளை முன்வைக்க அவருக்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்தது. அலுவலகத்தின் கவனம் பொருளாதாரம், சூழலியல், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கான பராமரிப்பு போன்ற துறைகளில் முழுமையான மனித வளர்ச்சியை ஊக்குவிப்பதில் அடங்கியுள்ளது என்றார்.

### பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் முதியோர் பராமரிப்பு

சமயப் பெரிய மேலாளர்களின் (CRMS) கூட்டுக் கூட்டத்தின் போது, 2025-2027க்கான புதிய செயற்குழு அறிவிக்கப்பட்டது. Franciscan Friar Derrick Yap தலைமையில் வெளியேறும் குழுவிற்கு ஆயர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்து, வரவிருக்கும் தலைவர் Fr Francis Lim, SJ அவர்களை வரவேற்றனர்.

### புதிய நற்செய்தி பரப்பு

புதியமுறையிலான நற்செய்தி பரப்பு (INE), மைக்கேல் சேவியர் மற்றும் அலெக்ஸ் சூங் ஆகியோர், 2021 இல் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து, இயங்கலை மூலம் தங்கள் பணி பற்றிய புதுப்பிப்பை வழங்கினர். சபா மற்றும் சரவாக்கில் உள்ள மறைமாவட்டங்களுடன் வலுவான உறவுகளை வளர்க்கும் அதே வேளையில், குறிப்பாக பினாங்கு, கோலாலம்பூர் மற்றும் மலாக்கா-ஜொகூர் ஆகிய மறைமாவட்டங்களில், அதன் விரிவாக்கத்தை இந்த நிறுவனம் முன்னோக்கி நகர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

### மலேசிய கத்தோலிக்க இளைஞர்கள் பேரவை (MCYPA)

ஏப்ரல் 2025 இல் திட்டமிடப்பட்ட நாடு தழுவிய இளைஞர் நிகழ்வான சிலுவைப் பாதை திருப்பயணம் (பெர்ஜலானன் சாலிப்) கோத்தா கினாபாலுவில் மலேசிய கத்தோலிக்க இளைஞர்களின் பேரவையின் போது தொடங்கப்படும். மலேசியாவில் உள்ள குருமார்களுக்கும் அடுத்த தலைமுறை கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான தொடர்பை வலுப்படுத்தும் வகையில், இளைஞர்கள் ஆயர்களுடன் ஈடுபடுவதற்கான வாய்ப்பையும் இந்நிகழ்வு வழங்கும் என்றும் கருத்துரைக்கப்பட்டது.

## கூலிம் பங்கில் மரியாவின் சேனை பயிரலங்கம்

கூலிம்: கடந்த 2.2.25. ஞாயிறன்று இங்குள்ள திரு இருதய ஆண்டவர் பங்கில் தலைமைக் குருவும் பங்கு தந்தையுமான அருள்பணி ஹென்றி ராஜூ அவரின் முயற்சியால் மரியாவின் சேனை தமிழ் குழுவை தோற்றுவித்தார்.

கத்தோலிக்க திருஅவையில் செயல்படும் திருத்தூது பணி கழகங்களில் மிகப் பெரியது மரியாயின் சேனை என்றால் மிகையாகாது. உலகில் எல்லா நாடுகளிலும் பரவியுள்ள மரியாயின் சேனையில் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் உள்ளனர். இச்சேனையில் இணைந்திருக்கும் உறுப்பினர்கள் அவர்களது அர்ப்பணிப்பால் இறைவனை மாட்சிபடுத்துவது மரியாயின் சேனையின் முதன்மையான நோக்கம். தங்கள் வாழ்வில் இறைவேண்டல் மற்றும் சேவை வழியாக உறுப்பினர்கள் தூய ஆவியின் கருவிகளாக மாறுகின்றனர். நற்செய்தி அறிவிப்பு, பங்கிலும் மருத்துவமனையிலும் நோயாளிகளைச் சந்திப்பது, பங்கு மக்களை சந்திப்பது, மறையறிவூட்டுதல், புதிதாக திருமுழுக்குப் பெற்றவர்களைச் சந்திப்பது, பங்கு சமூகத்தின் பிற ஆன்மீகத் தேவைகளை நிறைவுச் செய்தல் முதலியன இச்சேனையரின் சில பணிகளாகும்.

இக்குழுவினருக்கு சகோதரர் ஜோசப் பயிற்சிகள் கொடுத்தார். முதல் பயிற்சியில் 23 பேர்கள் பங்கெற்றனர். 2.2.25 காலை 9.30 மணிக்கு நடைபெற்ற இச்சேனையின் தேர்தல் நாளில் 10 பேர்கள் மட்டுமே



பங்கேற்றனர்.

புதிய நிர்வாகக் குழுவினர் தேர்வுச் செய்யப்பட்டனர். தலைவர் சகோ. அந்தோணி, துணைத்தலைவர் சகோ. ஜேன் சந்தனசாமி, செயலாலளர் சகோ. ஜெசிந்தா, பொருளாளர் சகோ. சுமதி.

அறுவடையோ மிகுதி ஆனால் வேலை ஆட்களோ குறைவு. இறைப்பணிக்கான ஆட்களை இறைவன் தேர்ந்தெடுத்து அனுப்ப தொடர்ந்து மன்றாட உறுப்பினர் கேட்டுக்கொள்ளப்பட்னர்.

-ஜேன் சந்தனசாமி

## திருத்தொண்டர் ஜோனதன் என்ரூ ராவ் , அருள்பணியாளராக அருள்பொழிவு செய்யப்பட்டார்

செராஸ்: கடந்த சனவரி 25-ஆம் திகதி அன்று, இங்குள்ள புனித பிரான்சிஸ் அசிசி பங்கில் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களால் திருத்தொண்டர் ஜோனதன் என்ரூ ராவ் அவர்கள் அருள்பணியாளராக அருள்பொழிவு செய்யப்பட்டார். ஓய்வுப்பெற்ற பேராயர் முர்ஃபி பாக்கியம் அவர்கள் உடனிருந்தார்.

அன்று காலை 10.30 மணிக்குத் தொடங்கிய



புதிய அருள்பணியாளரை பேராயர் வாழ்த்துகிறார்

திருப்பலிக்கு அருகிலிருந்தும் தொலைவிலிருந்தும் அருள்பணியாளர்களும் பொதுநிலையினரும் ஆலயத்தில் கூடினர். திருப்பலி ஆங்கிலம், மலாய் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் பன்மொழி திருப்பலியாக கொண்டாடப்பட்டது.

அருள்பொழிவு திருச்சடங்கில் திருத்தொண்டரின் வாக்குறுதிகளோடு புனிதர் மன்றாட்டும் குருத்துவ ஆடை அணிவிப்பும் பலரின் கவனத்தை ஈர்த்தது.

தொடர்ந்து பங்குத் தந்தை புதிய அருள்பணி ஜோனதன் அவர்களுக்கு வாழ்த்தினை வழங்கினார். நிறைவாக வருகைத்தந்த குடும்ப உறுப்புனர்களுக்கும், அனைவருக்கும் புதிய குருவானவர் சிறப்பு ஆசீர்வாதம் வழங்கினார்.

தொடர்ந்து, மதிய உணவு உபசரிப்போடு இக்கொண்டாட்டம் ஒரு முடிவை எய்தியது. திருத்தொண்டராக மூன்று மாதங்கள் ரவாங், புனித யூதா ததேயு பங்கில் மேய்ப்புப்பணி ஆற்றிய இவர் இப்போது அதே பங்கிற்கு துணை பங்குத்தந்தையாக நியமணம் பெற்றுள்ளார்.

## கோலசிலாங்கூர், குழந்தை இயேசு சிற்றாலயத்தில் ஆண்டு திருவிழா கொண்டாடப்பட்டது

கோலசிலாங்கூர்: குழந்தை இயேசுவை காணிக்கையாக ஒப்புக் கொடுத்த திருவிழா திருப்பலி "எனது கண்கள் உமது மீட்பினைக் கண்டன." என்ற கருப்பொருளுடன் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் 2 திருப்பலிகள் 2/2/2025 அன்று, பெஸ்தாரி ஜெயா புனிதர் வனத்து சின்னப்பர் பங்குத் தந்தை மறைத்திரு. ஜேம்ஸ் கேபிரியல் அவர்களால் கொண்டாடப்பட்டது.



குழந்தை இயேசு நம்மை காண வந்திருக்கின்றார். அவரை காண நாம் தயாராக வேண்டும் என்று பங்குத் தந்தை கூறினார். இயேசு நமக்கு ஆசீர்வாதம் வழங்கவும் பாவத்திலிருந்து விடுதலை தரவும் தயாராய் இருக்கிறார். நாம் அதற்கு தயாராவோம் என்றும் வலியுறுத் தினார்.

திருப்பலிக்குப் பிறகு நற்கருணை ஆராதனை நடத்தப்பட்டது. பின்னர் நற்கருணை பவனியாக ஆலயத்திலிருந்து புறப்பட்டு ஆலய சாலை வழியாக கொண்டு வரப்பட்டது. திரளானோர் இந்தப் பவனியில் மெழுகுவர்த்தி ஏந்தியவாறு ஊர்வலத்தில் கலந்துக் கொண்டனர். குழந்தை இயேசுவைப் போன்று வேடமிட்டு சிறுவர் சிறுமியர்கள் சிலர் பவனியில் கலந்துக் கொண்டது அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

5 நாட்களாக நடைப்பெற்ற நவநாள் மற்றும் திருவிழா திருப்பலிகளில் இரண்டாயிரத்திற்கு அதிகமானோர் கலந்துக் கொண்டனர் என்று திருவிழா ஏற்பாட்டுக் குழுத் தலைவர் ஜேசுதாஸ் வரதராஜு குறிப்பிட்டார். குழந்தை வரம் வேண்டி இவ்வாலயத்தில் கலந்துக் கொள்வோரின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரிப்பதாகவும், அதேவேளையில் ஆலயத்தின் உள்புற தரை சிமிண்டில் ஒரு வித உப்பு தோன்றுவதாகவும் அதனை பயன்படுத்துவோர் நோய் குணமடைவதாகவும் அவர் கூறினார்.

பங்கு இளைஞர் குழு சார்பாக சிறுவர்-சிறுமியர்களுக்கு பலவிதமான விளையாட்டுகளும் நடத்தப்பட்டன. கலந்துக் கொண்ட அனைவருக்கும் மதிய உணவும் வழங்கப்பட்டது.

-
மாசிலாமணி, கோலசிலாங்கூர்

**அருள்பணித்துவம் மற்றும் துறவு வாழ்வுக்கான தேவ அழைத்தல்கள் பெருக இறைவனை நோக்கி சிறப்பான விதத்தில் செபிப்போம் என பிப்ரவரி மாதத்திற்கான செபக்கருத்தில் அழைப்பு விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.**

## இறையாட்சி ஏழைகளுக்குரியது!

இன்று பொதுக்காலம் 6-ஆம் ஞாயிறு திருவழிபாட்டில் இணைந்துள்ளோம். “ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர்” என்ற கருபொருளை யொட்டி சிந்தித்துணர நாம் அழைக்கப்படுகிறோம். முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எரேமியா நிலையற்ற மனிதரில் நம்பிக்கை வைக்காமல் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டு நீர் அருகில் நடப்பட்ட மரம்போல் பசுமையாக வளர்ந்து எப்போதும் கனி கொடுக்க அழைக்க நம்மை அழைக்கிறார்.

மனிதர்கள்மேல் வைக்கின்ற நம்பிக்கை உடனடித் தீர்வைத் தரலாம். ஆனால், நிரந்தரத் தீர்வு ஆண்டவரிடமே உள்ளது என்பதை வாசகம் வலியுறுத்துகிறது.

அடுத்தது வரும் இரண்டாம் வாசகத்தில், கொரிந்து நகரில் இறந்தோர் உயிர்த்தெழுவதில்லை என்று போதித்து வந்த போலி போதகர்களின் போதனைக்கு, உயிர்ப்பு தொடர்பாக விளக்கம் அளிக்கின்றார். அவர், கிறிஸ்துவின் உயிர்ப்பே நம்பிக்கையையும் நற்செய்தி அறிவிப்பையும் பொருளுள்ளதாக மாற்றுகின்றன என்றும் கிறிஸ்து இறந்து உயிர்த்தெழுந்ததை நம்பாவிட்டால் நீங்கள் இன்னும் பாவத்தில்தான் வாழ்பவர்களாவீர்கள் என்று எச்சரிக்கிறார். அழிந்துபோகும் இவ்வுலக உடலில் தங்கள் நம்பிக்கையைப் பதிய வைக்காமல், அழியாமல் உயிர்க்கும் அந்த உடலின்மேல் நம்பிக்கையைப் பதிய வைக்க அவர்களை அழைக்கின்றார் புனித பவுல்.

உண்மையில் யார் பேறுபெற்றவர்கள் என்ற கேள்விக்கு தக்க பதிலாக இயேசுவின் இன்றைய போதனை அமைகிறது இயேசுவின் இறையாட்சி ஏழைகளுக்குரியது. இயேசு தன் இறைப்பணியில் தேவையில் உழல்வோர், பட்டினிகிடப்போர், துயருறுவோர் - என்று சமுதாயத்தால் ஓரங்கட்டப்பட்டோருக்கும் ஒடுக்கப்பட்டோருக்கும் முன்னுரிமை கொடுத்தார். அவர்களை வாழவைக்கார். ‘பேறுபெற்றோர்’ என்ற அவர்களை வாழ்த்துகின்றார்.

ஆம், இயேசுவின் இன்றைய செய்தியைக் கூர்ந்து கேட்டால், ஏழையரிடத்தில்தான் கடவுள் அன்பும் பரிவும் கொண்டு, அவர்களோடு என்றும் இருக்கிறார் என்று இறைமகன் இயேசு கூறுகிறார். இயேசு தமது போதனைகளில் ஏழைகளை உயர்த்திப் போற்றுகிறார். நம்மில் சிலர், தங்களிடம் பணமும் செல்வாக்கும் இருக்கின்றது என்ற அகந்தையில் இருக்கிறார்கள். இவர்களில் கடவுள் புறக்கணிக்கப்படுகிறார். நற்செய்தியில் இயேசு, செல்வர்கள், உண்டு கொழுத்திருப்போர், இன்புற்றிருப்போர் யாவருக்கும் ஐயோ கேடு என்று கூறுகின்றார். இறைவாக்கினர் எசாயாவோ இறைநம்பிக்கை இல்லாமல் வாழ்வோர் பாலைநிலத்துப் புதர்ச்செடிக்கு ஒப்பாவர். மாறாக, ஏழைகள், பட்டினியாய் இருப்போர், அழுதுகொண்டிருப்போர், தன் பொருட்டு இகழ்ந்து தள்ளப்படுவோர் யாவரும் பேறுபெற்றோர் என்கிறார்.

நாம் எந்த பிரிவை ஏற்க விரும்புகிறோம்? கடவுளைப் புறக்கணிக்கும் செல்வந்தரா? அல்லது கடவுளையே நம்பி வாழும் ஏழைகளா? உண்மையில், ‘ஆண்டவர்மீது கொள்ளும் நம்பிக்கைதான் நமக்கு அனைத்து விதமான ஆசிகளையும் பெற்றுத் தரும் என்பதில் நம்பிக்கை கொள்வோம்...

-ஆர்.கே.

### பொதுக்காலம் 6ஆம் வாரம் - ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம்: | எரே 17: 5-8 |
| திரு.பாடல் | 1: 1-2. 3. 4,6 2-ம் |
| வாசகம் | 1கொரி 15: 12, 16-20 |
| லூக்கா | 6: 17, 20-26 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3 ( 3)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை: வாரம் 2**